சிறந்தமுறையில் குறுகிய காலத்தில் தரமான தெளிவான கலர் படப் பிடிப்புகளுக்கு நாடுங்கள்

**சென்றல் ஸ்ருடியோ**

மாம்பழம் சந்தி, அரியாலை

பக்கங்கள் எட்டு — விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 110 சனி 26-05-1990 (வைகாசி 12) துல்ஹஜ்ஜா 01

கறுப்பு வெள்ளை, பாஸ்போட், அடையாளஅட்டைப் படங்களும், புளக் போன்றவற்றிற்கும் நாடுங்கள்

**சென்றல் ஸ்ருடியோ**

மாம்பழம் சந்தி, அரியாலை

## அரச ஊழியர் வேலை நேரம் 45 நிமிடத்தால் வேலை நாட்கள் 30 நாட்களால் அதிகரிக்கும்

பல பிரிவுகளிலிருந்து அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளுக்கு இணங்க அரசாங்க ஊழியர்களின் வருடாந்த விடுமுறைத் தினங்களை குறைப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றது. இதன்படி அரசாங்க ஊழியர்களுக்கான வருடாந்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 45 இலிருந்து 30 ஆகக் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறே அரசாங்க ஊழியர்களின் வருடாந்த வேலை நாட்களின் எண்ணிக்கை 186 இலிருந்து 216 ஆக அதிகரிக்கப் படவுள்ளது. இந்த விடுமுறை மாற்றங்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் விடுமுறை நாட்கள் வருடாந்த விடுமுறை, வைத்திய விடு முறை எனப் பிரிக்கப் பட மாட்டாது பொதுவான விடு முறையாக கணிக்கப் படும்.

இப் புதிய விடுமுறை மாற்றங்களின் போது தேசிய வீரர்களின் ஞாபகார்த்த தினமான மே 22 ஆம் திகதி விடு முறை தினமும் ரத்துச் செய்யப்படுவதோடு அத் தினத்தின் கொண்டாட்டங்கள் யாவும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுடன் இணைக்கப்படும், இதே வேளை தினசரி வேலை நாட்களின் கால எல்லையை 45 நிமிடங்களால் அதிகரிப்பதற்கும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கான விடுமுறை தினங்களை அதிகரிப்பதால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை கவனத்தில்எடுதத்தைமேற்படிமாற்றங்கள் புகுத்தப்படவிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலை சிங்களவர்களுக்கு இரவில் மட்டும் துப்பாக்கிகள் விநியோகம்

## 35 ராணுவ முகாம்களின் உதவியுடன் வனபரிபாலன காணிகளில் குடியேற்றம்

**திருமலை மாவட்டத்தில் உள்ள சிங்கள குடியேற்ற கிராமங்களில் வசிக்கும் சிங்கள மக்களுக்கு இரவு நேரங்களில் துப்பாக்கிகள் தற்பாதுகாப்பிற்காக வழங்கப் படுவதாகவும் அவை காலையில் வாங்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.**

திருமலை மாவட்டத்தில் ஆண்டான் குளத்திற்கும்—ஹபரணைக்குமிடையில் புதிய இராணுவ முகாம்களின் உதவியுடன் திட்டமிட்ட அடிப்படையிலான சிங்களக் குடியேற்றங்கள் தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாலாம் கட்டை என அழைக்கப்படும் ஆண்டாங் குளத்திற்கும் - ஹபரணைக்கும் இடையே வனபரிபாலன பகுதிக்கு சொந்தமான பெரும் தேக்கு காட்டுப்பகுதி உள்ளது,

இப்பகுதியிலேயே தற்பொழுது சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

— 08 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டில் உள்ள சகல குடும்பங்களினதும் உணவுமுத்திரைகளையும்நிறுத்தவேண்டாம்-டொமினிக்

யாழ் மாவட்டத்தில் பெறத் தகுதியிருந்தும் பலருக்கு உணவு முத்திரை, நிவாரணம் என்பன வழங்கப்படவில்லை. என்று யாழ் மாவட்ட வி.பு.ம. முன்னணிப் பொறுப்பாளர் டொமினிக் அவர்கள் கிராம சேவையாளர் மத்தியில் நேற்று பேசுகையில் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் உள்ளோருக்கான உணவு முத்திரைகள் நிறுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டில் உள்ள சிலர் குடும்பத்தைக் கவனிப்பதில்லை. ஆகையால் ஒவ்வொரு குடும்பத்தினரதும் நிலை குறைவுகளை ஆராய்ந்தே உணவு முத்திரை வழங்குவதை நிறுத்த வேண்

—08ஆம் பக்கம் பாக்கக

## மாகாண அரசு உருவாக்கிய வடமராட்சி கிழக்கு பிரதேசசபை தனித்து இயங்க மத்திய அரசு தடை

வடமராட்சி கிழக்கு பிரதேசசபை தனியாக இயங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கபடுகின்றது. இதன் காரணமாக பருத்தித்துறை பிரதேச சபையுடன் சேர்ந்து இயங்குமாறு உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடமராட்சி கிழக்கிற்கு புதிய உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கிற்கு புதிய பிரதேச சபை உருவாக்கப்பட்டு விசேட ஆணையாளரும் நியமிக்கப்பட்டார்.

ஆனால் இந்நடவடிக்கைகள் யாவும் மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி

—08 ஆம் பக்கம் பார்க்க

## மலையக மக்களுக்காக குரல் கொடுக்குமாறு தமிழக முதல்வருக்கு புலிகள் கேண்டுகோள்

தமிழக முதல்வருக்கும், தமிழக மக்களுக்கும் ஒரு வேண்டுகோள் என்ற தலைப்பில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இன்று சிங்கள அரசு மலையகம் வாழ் தமிழ் மக்கள் மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது. நாடு கடத்த முனைந்துள்ளது மலையகம் வாழ் தமிழ் மக்கள் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு இந்தியா செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அந்தச் சூழலில் ஒரு பகுதியினர் இந்தியா கடவுச் சீட்டைப் பெற்றிருக்கலாம் இன்று அக்கடவுச் சீட்டைப் பெற்றவர் களோடு, அவர்களது பிள்ளைகளையும் நாடு கடத்த முயல்கின்றது சிங்கள இனவாத அரசு இவர்கள் எல்லோரும் இத்தீவின் குடிமக்கள் பிரச்சனைக்குரிய மக்களை கலந்து பேசாது செய்த-இன்று செத்துப் போன ஒப்பந்தங்களுக்கு மீள

—08 ஆம் பக்கம் பார்க்க

### மக்களுக்கு குடிநீர் வழங்க

## அன்பளிப்பான பவுசரில் வீட்டுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நெடுந்தீவு மக்களின் குடிநீர் விநியோகத்திற்கென அன்பளிப்புச் செய்யப்பட்ட பவுசருடன் கூடிய மினி ராக்டரில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படாமல் அதன் சாரதி தனது

—- 8 ஆம் பக்கம் பார்க்க

## இனிமேல் அரசாங்க அதிபர்மூலம் வட-கிழக்கு புனரமைப்பு நிதி

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சகல புனர்வாழ்வு நிதி ஒதுக்கீடும் அரசாங்க அதிபர் ஊடாகவே வழங்கப்பட வேண்டுமென வடக்குக் கிழக்கு மாகாண சபை அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுல் படுத்தப் படவுள்ளது. மாவட்டரீதியாக மேற்கொள்ளப் படும் சகல புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைகளும்

. — 08ஆம் பக்கம் பார்க்க

### சபையில் ரஞ்சன் குற்றச்சாட்டு

## எனக்கும் ஹமீதுக்கும்பிரச்சினை உருவாக்க சு. க. முயற்சி

''எனக்கும், அமைச்சர் ஜனாப் ஹமீதுக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முயற்சிக்கிறது'' என்று பாராளுமன்றத்தில் பெருந்தோட்டத் தொழில்துறை பாதுகாப்பு ராஜாங்க, அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன குற்றஞ் சாட்டினார்.

''தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைசம்பந்தமாகஎனக்குஒன்றும்தெரியாது என்று கூறி அமைச்சர் ஹமீதுக்கும், எனக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்துவதேசுதந்திரக்கட்சியினரின் முயற்சி.

எமது அரசின் அமைச்சர்கள் அவரவருடைய பொறுப்பு எல்லைகளை நன்றாக உணர்ந்தே செயற்படுகிறார்கள்.

ஜனாப் ஹமீதின் விடயங்களில் நான் தலையிடுவதில்லை ஆனால் நாம் அமைச்சரவையில் எல்லா விடயங்களையும் கலந்துரையாகின்றோம் 'என்றும் திரு. ரஞ்சன் விஜயரத்ன சொன்னார்.

—08 ஆம் பக்கம் பார்க்க

### வாசகர்களுக்கு..

எதிர்பாராத மின்சாரத்தடை காரணமாக இன்றைய 'முரசொலி' வெளிவருவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு வருந்துகிறோம்.

-நிர்வாகி

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை கப்டன் 'அலன்'

(ந. பாக்கியலிங்கம்)

தாயின் மடியில்
06-05-1962

தாயக மண்ணில்
26-05-1987

தமிழ் மண்ணுக்கு வல்வை தந்த
தியாக வேங்கை
கப்டன் அலன்

நடனசிகாமணி பாக்கியலிங்கம்
அவர்களுக்கு
எமது அஞ்சலிகள்.

அலன்! நின் பாதைதான் தமிழீழ
மக்களுக்கு இருக்கும் பாதை!

நாமும் புறப்படுவோம்!

உன் அன்பர்கள்
வ. இ. நடனசிகாமணி – இரத்தினேஸ்வரி
குடும்பத்தினரும், சகோதரர்கள்,
நண்பர்களும்.

அம்மன் கோவிலடி
வல்வெட்டித்துறை

05168

## ஏறுமாறாகக் கேட்பின் கூறாமல் சந்நியாசம்

பாராளுமன்றங்களில் இலங்கைப் பாராளுமன்றம் கொஞ்சம் வித்தியாசமானது.

மற்றைய பாராளுமன்றங்களில் நடைபெறாத பல புதுமைகள் இங்கே அடிக்கடி நடைபெறும்.

அமிர்தலிங்கம் கூட்டணி எம்.பி.யாக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

உலகில் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து சாதனை செய்த பெருமை இலங்கை அரசையே சாரும்.

எதிர்க்கட்சியினர் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது வழக்கம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது என்பது; அவர் எவ்வளவு தூரம் மககளுக்கு விசுவாசமாக, அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கிறவராக இருந்திருக்கிறார் என்பதற்குச் சான்றாகும்.

இதனை அன்று அரசில் இருந்த ஐ.தே. கட்சியினர் ஏனோ உணர மறுத்தனர்.

இதேபோன்ற வழக்கத்திற்கு மாறான சம்பவம் ஒன்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடந்துள்ளது.

எதிர்க்கட்சியினரின் கேள்விக்கு அரச தரப்பினர் பதில் கூற மறுத்து எதிர்க்கட்சியினர் வெளி நடப்பு செய்த காலம் மாறி;

எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்குத் தான் பதில் கூற மாட்டேன் என்று கூறி அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன வெளிநடப்புச் செய்துள்ளார்.

ஸ்ரீ.ல.சு.கட்சி எம்பியான நிமால் ஸ்ரீபால விடுதலைப்புலிகள் பற்றி கேள்வி எழுப்பினார்.

''கல்முனையில், மட்டக்களப்பில் புலிகள் பொலிஸாரைக் கடத்தியும், தாக்கியும் உள்ளனர். இதனை அரசு மறைக்கப் பார்க்கிறது. அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் உள்ளது.

''இதே குற்றத்தைத் தெற்கில் யாரும் செய்திருந்தால் பிணையில் விட முடியாத குற்றமாகக் கணிக்கப்படும். அதனைச் செய்தவர்கள் இரவோடு இரவாக ரயர் போட்டு எரிக்கப்பட்டிருப்பார்கள். இது குறித்து விளக்கம் தர வேண்டும்'' என்று கேட்டார்.

அவ்வேளை அமைச்சர் ரஞ்சன் எழுந்து 'புலிகள்' சம்பந்தமான கேள்விகளுக்குப் பதிலளிக்கமாட்டேன்'' என்று கூறி வெளிநடப்புச் செய்தார்.

இச் செய்கை குறித்து சபாநாயகர் தாம் திருப்தி அடையவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஒத்திவைப்பு வேளைகளில் கேள்வி கேட்கும் உரிமை உறுப்பினர்களுக்கு உண்டு.

அந்தக் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் கொடுக்காமல் இருந்தால் நாடாளுமன்றம் இயங்கியும் பயனில்லை என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்,

அமைச்சர் ரஞ்சனின் வெளிநடப்பு விடயம் ஓர் கேலிக்கூத்து என்றும் முதுகெலும்பில்லாதவர் என்றும் எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

அவர்களின் கூற்றை மறுக்க முடியாது.

மக்கள் அரசாங்கத்தைப் புறக்கணிப்பது என்பது நடக்கக் கூடியது.

அரசு மக்களைப் புறக்கணிப்பதென்பது...?

மக்களின் சந்தேகங்கள், கேள்விகள், சக எம்.பிக்கள் வாயிலாகப் பாராளுமன்றம் செல்கிறது.

அக் கேள்விகளுக்கு அரசு பதில் கூற மறுத்தால், மறுத்து வெளியேறினால் மக்களுக்காக அந்த அரசு இல்லை என்றே கருத வேண்டும்.

இப்படியான இயலாத நிலையில் அமைச்சர் பதில்கூற மறுத்து வெளியேறுவதை விட, பதவி துறந்து வெளியேறுவது அழகு.

## இதயநாதம்

சனிக்கிழமை 26-05-1990

### நலவாக்கு

பயம் என்றால் என்ன என்று கேட்கும் உள்ளம் தேவை. ஆம் பயந்தறியாத இரும்பிலான இதயம் தேவை.

—சுவாமி விவேகானந்தர்

ஸ்ரீமானவிதி யாழ்ப்பாணம்

---

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு நேரடி விசிட் (1)

# வார்ட்டில் ஊழியர் வாயில் சிகரட் புகைய

# நோயாளிகள் மனம் புழுங்குகின்றனர்

**“யாழ்ப்பாண மக்களுடைய பிரச்சனைகளைப் பற்றித்தான் எழுதுகின்றீர்கள் பின் தங்கிய பிரதேசத்து மக்களுடைய பிரச்சனைகள் உங்கள் கண்களுக்குத் தெரிவதில்லையா . . . தெரிந்தும் ஒர வஞ்சனை காட்டுகிறீர்களா . , .?”**

யாழ்ப்பாண மக்களுடைய பிரச்சனைகளைப் பற்றி எழுதுகின்றீர்கள் ... பின் தங்கிய பிரதேசத்து மக்களுடைய பிரச்சனைகள் உங்கள் கண்களுக்கு தெரிவதில்லையா... தெரிந்தும் ஒர வஞ்சனை காட்டுகின்றீர்களா... ..

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையை ஒருமுறை வந்து பாருங்கள். நோயாளர்கள் படும் அவதிகளை பார்த்தாவது உங்கள் மனம் வேதனைப்படாதா......

இங்குநடைபெறும்வேதனையான நிகழ்வுகளை வெளிப்படுத்தி தீர்வுகாண உதவ மாட்டீர்களா?......

இப்படியான சொல் அம்புகள் கொண்ட பல கடிதங்கள் கிளிநொச்சி மக்களிடம் இருந்து வந்து குவிந்துள்ளன. சில கடிதங்கள் மிக நீண்டவை. பல பொதுமக்களின் கையொப்பங்கள் அதில் காணப்படுகின்றன.

மக்களின் பிரச்சனைகளை வெளிக்கொணர நாம் என்றுமே பின் நின்றதில்லை. வேதனைகளை சோதனைகளைச் சந்தித்தாலும் நாம் உண்மைகளை எம்மால் முடிந்தவரை வெளிப்படுத்த முனைந்துள்ளோம்.

பின்தங்கிய மக்களுடைய பிரச்சனைகள் உங்கள் கண்களுக்கு தெரிவதில்லையா என்று சில வாசகர்கள் வினா எழுப்பி கடிதம் எழுதுகின்றார்கள்.

பிரச்சனைகள் எம் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அப்பிரச்சனைகள் உண்மை என தெரியவரும் சந்தர்ப்பத்தில் உண்மைகளை மறைக்காமல் எழுத முனைகின்றோம்.

நாம் மூன்று வாரங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்குள் நோயாளர்களைப் போன்று நடமாடி நிலைமைகளை அறிந்தோம்.

நாம் காலையில் வைத்திய சாலைக்குச் சென்றால் அங்கு ஊழியர்கள் பலரைக் காண முடிவதில்லை. எட்டுமணிக்குப்பின் ஒன்பது முப்பதற்கு இடையில் இவர்களைக்காண முடிந்தது.

நோயாளர்கள் காலையிலே வந்து காத்து நிற்க தங்கள் வீட்டு வேலைகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு தாம் விரும்பிய நேரம் வைத்திய சாலைக்கு ஊழியர்கள் வருகின்ற நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி பின் தங்கிய மாவட்டம் தான். ஆனால் இம் மாவட்டம் மிக வேகமாக முன்னேறிக்கொண்டு வருகின்றது. இங்கு சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள்.

இங்கு வாழ்பவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளே. கூலிவேலைசெய்து வாழ்க்கை நடத்துபவர்களும் அங்கு இருக்கின்றார்கள்.

இம்மாவட்டத்திலே மத்திய மருந்தகங்களாக கண்டாவளை, வட்டக்கச்சி, வன்னேரிக்குளம், ஆனையிறவு ஆகியவற்றில் உள்ள மருந்தகங்களையும் பிரசவ வைத்திய சாலைகளாக தர்மபுரம், வேராவில், உருத்திரபுரம் ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளையும்கிராமியவைத்தியசாலைகளாகபூநகரி அக்கராயன் ஆகிய இடங்களில் உள்ளவற்றையும் குறிப்பிடலாம்.

மாவட்ட வைத்தியசாலைத் தரத்தில் கிளிநொச்சிமாவட்ட வைத்திய சாலையே இருக்கின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி மக்களின் துயர்களைத் துடைக்க வேண்டிய பொறுப்பு கிளிநொச்சி வைத்தியசாலையையே சாரும்.

ஆனால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி மக்களின் துயர்களை போக்கப் பயன்படாமல் துயர்களை அதிகரிப்பதற்கே உதவி புரிந்து வருகின்றது.

வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் நோயாளர்களுடன் அன்பாக நடந்து கொள்ளத் தவறி விடுகின்றனர். அங்கு கடமையாற்றுபவர் ஒருவர்...... நோயாளர்களைப் பார்த்து...... ஏய்

**உதரன்**

ஏய்...... உனக்குச் சொல்லுறது ..... விளங்கேலயா...... அங்கால போ...... ஏய் ஏய் .. அங்கால போ ..... என்று மாடு மேய்க்கிறார்.

நோயாளர்களுடன் எப்படிப் பழக வேண்டும் என்பதை மறந்து புல்வெளியில் மாடு மேய்ப்பவன் ஒருவன் மாடுகளைப் பார்த்துக் கூறுவதைப் போன்று நோயாளர்களைப் பார்த்து ஊழியர்கள் கூறுகின்றனர்.

நோயாளர்கள் இவர்கள் கண்களுக்கு மாடுகளைப் போன்றுதான் தெரிகின்றனரோ தெரியவில்லை ......சில வேளை அப்படியும் இருக்கலாம்.

நோயாளர்கள் பலர் வரிசையாக சிகிச்சை பெறுவதற்கு நின்று கொண்டிருக்கின்றனர். தாதிமார் சிலர் தமக்கு வேண்டியவர்களை வரிசையில் நிற்க விடாமல் சிகிச்சை பெற வைத்து கவனிப்போடு வாசல் வரை கூட்டிச் சென்று வழி அனுப்பும் காட்சிகளையும் எம்மால் அங்கு காண முடிந்தது.

இதைப் பார்த்து எமக்கு அருகில் இருந்த அழகம்மா என்ற ஒரு அம்மாள்...... 'எங்கேயும் அணைவு இருந்தா ...... காரியத்த சுலபமா முடிச்சிடலாம் ... .. எங்களப் போல ஏழையள் யாரின்ர அணைவைப் பிடிக்கிறது ..... நாங்கள் கால்கடுக்க நிண்டு வைத்தியம் செய்ய வேண்டியது தான் தலை எழுத்து எண்டு இதை யாரால மாத்தேலும் என்று கூறி வேதனைப் பெருமூச்சுவிட்டார்.

**நேரடி ரிப்போட்**

நோயாளர்களுக்கு ஊசி போடும் அறையை மெல்ல எட்டிப் பார்க்கிறோம் ...... என்னப்பா நாங்கள் எல்லாம் வரிசையில் நிற்கிறது உமக்குத் தெரியவில்லையோ ... என்று பின் வரிசையில் ஒரு குரல் ஒலிக்கிறது.

ஊசிபோடுற 'நேஸ்' இவ்வளவு நேரமா என்ன செய்யிறா எண்டுதான் பாக்கிறம் என்றோம்...அப்போதும் அந்தப் பின் குரல் சாந்தமடையவில்லை, ஏதோ சொல்லி எம் மீது திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது.

**“எங்கேயும் அணைவு இருந்தா காரியத்த சுலபமா முடிச்சிடலாம் எங்களைப் போல ஏழையள் யாரின்ர அணைவைப் பிடிக்கிறது... நாங்கள் கால்கடுக்க நிண்டு வைத்தியம் செய்ய வேண்டியதுதான் தலை எழுத்து எண்டா இத யாரால மாத்தேலும்”**

ஊசிபோடும் தாதி தான் யாரோ தமக்குத் தெரிந்த சிலருடன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார். வரிசையில் நிற்கும் நோயாளர்களைப் பற்றி அவர்கள் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. கடமை உணர்வு என்பது இப்போது நம்மவரிடையே மெல்ல மெல்லக் குறைந்துகொண்டு வருகிறது

தாதிமார் சப்பாத்து அணிய வேண்டும் என்று சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது. ஆனால் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் கடமையாற்றும் தாதிகளின் கால்களில் சப்பாத்துக்களைக் காண முடியாது. பாட்டா காலணிகளையே அணிந்து வைத்திய சாலையைச் சுற்றி பவனி வருகின்றனர்.

வைத்திய சாலைக்குள் புகைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. வாட்டுக்குள் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் வாட்டுக்குள்ளே சிகரெட் புகைத்துக் கொண்டிருக்கும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு நாம் அதிர்ச்சி அடைந்து விட்டோம்.

வைத்தியசாலை என்றால் என்ன? அங்கு யார் அனுமதிக்கப்படுகின்றார்கள்? இங்கு நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்ள முடியாதவர்கள் வைத்தியசாலையில் கடமையாற்றினால் நோயாளர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

கடந்த வாரம் இந்த வைத்தியசாலையில் வேதனையான சம்பவம் ஒன்று இடம் பெற்றது. ஒரு ஆபத்தான நோயாளரை அன்புலன்ஸ் வண்டி மூலம் யாழ் போதனா வைத்திய சாலைக்குக்

7—ம் பக்கம் பார்க்க

# செய்தி மஞ்சரி

## இளைஞர் பாராளுமன்றம்

யொவுன்புர முகாம்கள் நடைபெற்றபோது தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்டு வந்த இளைஞர் பாராளுமன்றம் இம் முறை எதிர்வரும் ஜூன் மாதம் 8—ம், 9—ம் திகதிகளில் மகரகம தேசிய இளைஞர் நிலையத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது எனப் பிரசார விரிவாக்கற் பகுதியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இளைஞர் பாராளுமன்றத்திற்கு வட, கிழக்கு, மலையகம் உட்பட நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 225 இளைஞர் கழக உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

## கொழும்பில் டெங்கு

நுளம்பினால் உண்டாகும் டெங்கு காய்ச்சல் தற்போது கொழும்பில் வேகமாகப் பரவி வருகின்றது.

நுளம்புத் தொல்லையை ஒழித்துக்கட்டச் சுகாதார அமைச்சு கொழும்பு மாநகர சபை சுகாதார அமைச்சின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## ஆளுமை வெளிப்பட...

(காவலூர்)

''இளைஞர் சக்தி மகத்தானது. அது நெறிப்படுத்தப்பட்டு சமூக முன்னேற்றத்திற்கு பயன்படவேண்டும். இளைஞர்களது ஆளுமையை வளர்க்கவும், வெளிக்கொணரவும் இந்த இளைஞர் அமைப்பு உதவும்.

இவ்வாறு வேலணை தெற்கில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட வேலணை தெற்கு இளைஞர் மன்றக் கூட்டத்தில் உரையாற்றிய அமைப்பாளர் திரு. கந்தையா சோதிதாஸன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பிரதிநிதி திரு வாசன் அவர்களால் அங்குரார்ப்பணஞ் செய்துவைக்கப்பட்ட இந்த மன்றத்தின் தலைவராகச் செல்வி எஸ். மாலாவும் செயலாளராக திரு. சிறீதரன் அவர்களும் பொருளாளராக செல்வி விக்னேஸ்வரி அவர்களும் தெரிவாகினர். இருபது பேர் கொண்ட உப·குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (24)

## 'கலைப் படைப்புகள் தன்மை'

(காவலூர்)

இலக்கியம் சமூக உருவாக்கத்திற்கு வழி காட்ட வேண்டும். சமூக அமைப்பின் தேக்க நிலையை காட்டாமல் சமூக முன்னேற்றத்திற்கான வழி காட்டலைப் கலைப்படைப்புக்கள் கொண்டிருக்கவேண்டும்.''

வேலணை ஐயனார் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட கலை விழாவில் உரையாற்றிய வேலணை தெற்கு இளைஞர் மன்ற ஆலோசகரும், வேலணை கலை இலக்கிய வட்டத் தலைவருமாகிய திரு. கந்தையா சோதிதாஸன்மேற்கண்டவாறு கூறினார்.

திரு சோதிதாஸன் மேலும் அங்கு உரையாற்றுகையில் தென் இந்திய சினிமாவின் தாக்கம் எமது நாடக மரபைப் பாதித்து அதன் கலைத் தன்மையைக் கெடுத்துள்ளது என்றார். வேலணை வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர் திரு. எஸ். சண்முகவடிவு, திரு. விக்கினேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். (24)

## வேலணை மக்கள் புகார்

தீவுப் பகுதி தெற்கு (வேலணை) உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பல பாதிக்கப்பட்ட மக்கள் அரசால் வழங்கப்படும் சுய தொழில் புரிவதற்கான நாலாயிரம் ரூபா பணம் பெறமுடியாது ஒதுக்கப்பட்டுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வேலணை ஆறாம் வட்டார மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த கால வன்செயல்களின் போது தொழில் இன்றி இம்மக்கள் பாதிப்புற்றிருந்தனர். உடனடியாக இவர்களுக்கும் மேற்படி நாலாயிரம் ரூபாய் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கோரிக்கையும் விடப்பட்டுள்ளது. (24)

## வங்கிச் சட்டத்தில் திருத்தம்

வெளிநாட்டு வாடிக்கையாளர்கள், இலங்கையில் வதியாதவர்கள் சார்பில் பல வங்கிக்கணக்குகளை லைசென்ஸ் பெற்ற வர்த்தக வங்கிகள் வைத்திருப்பதற்கு நாணயசபை அனுமதியளிக்கும் பொருட்டு வங்கிச் சட்டத்தில் கொண்டு வருவதற்கான திருத்தங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

நடை முறைக் கணக்கு, சேமிப்புக் கணக்கு, வைப்புக் கணக்கு ஆகிய கணக்குகளை வைத்திருப்பதற்கு இச் சட்டத் திருத்தம் வசதி செய்யினும், இக் கணக்குகளுக்கு கடன் வசதி அளிக்கப்படமாட்டா.

இக் கணக்குகளில் வைக்கப்படும் பணம் வெளிநாட்டுக் கரன்ஸிகளாகவே இருக்கவேண்டும். இக் கணக்குகளை வைத்திருப்பவர்களின் பெயர் விபரங்கள், கணக்கு விபரங்கள், எதுவும் வெளியிடப்படமாட்டாது. இரகசியமாக வைக்கப்படும்.

இக்கணக்குகள் பற்றிய விபரங்களைத் தெரிவிக்கும் எந்த வங்கி அதிகாரியும் தண்டிக்கப்படுவார்.

## யாழ். பல்கலைக் கழகத்தில்

# விவசாயபீடப் புதியமாணவர் வகுப்புக்கள் செப்-3இல் ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழகத்தில் விவசாயப் பீடத்திற்கென அனுமதி பெற்ற புதிய மாணவர்களுக்கான வகுப்புக்கள் செப்ரெம்பர் 3ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்மாவட்ட விவசாயத் திணைக்களம் இதற்கான சகல உதவிகளையும் செய்வதில் முன்வந்துள்ளது. ''பரமேஸ்வரா ட்றஸ்'' இலிருந்து 48 ஏக்கர் வயற்காணி விவசாய பீடத்திற்கென உதவியுள்ளது.

மேலும் மிருக வைத்திய ஆராய்ச்சிக்கென 60 ஏக்கரும் அதிலிருந்து குறிப்பிட்ட தூரத்தில் மாணவர்கள் ஆராய்ச்சிகள், மீன் வளர்ப்பு, வரட்சி போன்ற பல செய்முறைகளுக்கும் உதவும் வகையில் 100 ஏக்கருமாக மொத்தம் 160 ஏக்கர் நிலப்பரப்பை யாழ் பல்கலைக்கழகம், யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது.

விவசாய பீடத்திற்கான உபகரணங்களை வாங்குவதற்கென பல்கலைக்கழக மானியக்குழு 50இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு அனுமதித்துள்ளதுடன், எதிர்வரும் 9ந்திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் விவசாயத்துறைதொடர்பான கருத்துக்கள், விபரங்கள் என்பன தீர்மானிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இக்கூட்டத்தில் வவுனியா விவசாய பாடசாலை அதிபர் திரு. இராஜதுரை, டாக்டர் விவேகானந்தன் (கிளிநொச்சி) இராமநாதன் (விவசாயத் திணைக்களம், திருகோணமலை), மட்டக்களப்புக் கலாநிதிகள் இரவீந்திரநாத், இரவீந்திரன், சபேசன் ஆகியோரும், பேராதனை கலாநிதி சிவலோகநாதனும் கலந்து கொள்கிறார்கள். (4)

# நிதி வந்த பின்னர் தான் நிவாரணம் எனத்தெரிவிபபு

(கோண்டாவில்)

இப்பகுதியில் முதியோர் உதவிப் பணம் பெறத் தகுதியுடைய முப்பதுக்கு மேற்பட்டோர் இப்பணத்தை பெற முடியாத நிலையிலுள்ளார்கள்.

இவர்களுக்கான சிபார்சு தன்னால் வழங்கப்பட்டுள்ள போதும் சமூக சேவை பகுதியினரால் இம்மனுக்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாதுள்ளது என்றும் கோண்டாவில் கிழக்கு கிராமசேவகர் திரு ப. சந்திரசேகரம் புகார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாகாண அமைச்சு அரச அதிபருக்கூடாக இந்த உதவிப்பணத்தை வழங்குவதற்கான நிதியை அனுப்பி வைக்கும் பட்சத்திலேயே தம்மால் அப்பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமென்று சமூக சேவைகள் பகுதியினர் தம்மிடம் கூறியுள்ளதாகவும் திரு. சந்திரசேகரம் தெரிவித்தார். (41)

## பணிப்பாளர் விருப்பு

# கிராமத்தின எழுச்சிக்கு "பாடசாலை உதவ வேண்டும்

(மட்டக்களப்பு)

புதிதாக உருவாக்கப்பட்ட இப் பாடசாலையை நடுநாயகமாக வைத்து இக் கிராமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருக்கும் இப் பாடசாலை இக்கிராமத்தின் எழுச்சிக்கு உறுதுணையாக அமைய வேண்டும்.''

இவ்வாறு மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்ட மட்டக்களப்பு ரெடிதென்ன முஸ்லிம் குடியேற்ற திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையைத் திறந்துவைத்து உரை நிகழ்த்திய மட்டக்களப்பு பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

மேற்படி பாடசாலை அதிபர் ஜனாப் ஏ. என். ஹனிபா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. சோமசுந்தரம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்: இப் பாடசாலையில் முறைசாராக் கல்வித்திட்டம் முதியோர் கல்வித்திட்டம் என்பனவும், ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் இப்பாடசாலை பல வழிகளிலும் இக் கிராம முன்னேற்றத்திற்கு பயன் தரும் என்றார்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபை திட்ட முகாமையாளர் திரு. பி. எஸ் விஜயசுந்தர உரையாற்றுகையில் மகாவலி அபிவிருத்தித்திட்ட குடியேற்றப் பகுதியில் தமிழர்களும் வந்து குடியேற வேண்டும். அதன் மூலம் இப் பிரதேசத்தில் இன ஐக்கியம் உருவாகும் என்றார்.

மட்டக்களப்பு வெறக்கந்தை பகுதியில் அமைந்துள்ள இக் குடியேற்றத் திட்டத்தில்150 முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

இவர்களுக்கு விவசாய நிலங்களும் குடியிருப்பதற்கான நிலமும் 18 மாதங்களுக்கு இலவச பங்கீட்டு உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீடுகட்டுவதற்கான கடன் வசதிகளும் செய்து கொடுக்கப்படும் (05)

# வட்டுக்கோட்டையில் இன்று

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை பிரதேசத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்குமான பொதுக்கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 5மணியளவில் தமிழீழவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்டுக்கோட்டை பிரதேசக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு சகல சனசமூக நிலையங்களினதும் விளையாட்டுக் கழகங்களினதும் தலைவர்களையும் செயலாளர்களையும் அனுப்பி வைக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்டுக்கோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஐயர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (12)

## மட்டக்களப்புச் செயலக

# புதிய கட்டிட வேலைகள் அக்டோபருக்குள் பூர்த்தி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புசெயலகபுதிய கட்டிட வேலைகள் எதிர்வரும் அக்டோபர் மாதத்திற்கு முதல் பூர்த்தியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் தெரிவித்தார்.

இதற்கென 1 கோடி 10 லட்சம் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளதாகவும் இதில் நோராட் ஸ்தாபனம் 50 லட்சம்ரூபாவை (5மில்லியன்) வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

# இருமாடிக் கட்டடம்

ஒன்றிணைக்கப் பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டமிடல் அமைச்சுக்கென முல்லைத்தீவு செயலகத்திற்கருகே கட்டப்பட்ட இருமாடிக் கட்டடம் அரச அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

இக் கட்டட வளவை இப்பகுதி சனசக்தி குழுக்கள் சிரமதானமூலம் துப்பரவு செய்தும், சீரற்றுக் கிடந்த வீதிகளைச் செப்பனிட்டும் வருகின்றனர்.

## சுவாமி பிரேமாத்மானந்தஜி

# மேடைப் பேச்சில் அல்ல செயலில் தொண்டு புரிந்தவர்

(மட்டக்களப்பு)

''சுவாமி பிரேமாத்மானந்தஜி மேடைப் பிரசங்கம் மூலமல்ல செயல் முறையிலேயே பல தொண்டுகளைச் செய்தவர்.''

இவ்வாறு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத்சுவாமி ஜீவானந்தஜீ மகராஜ் கல்லடி விபுலானந்த நினைவு மண்டபத்தில் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜியின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரை நிதழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் ''சுவாமி பிரேமாத்மானந்தஜி நம்மிடையே வாழ்ந்த மகா புருஷர் ஆர்ப்பாட்டம் இன்றி அமைதியாகப் பலரும் வியக்கும் பெரும் பணிகளைச் செய்து முடித்தவர்'' என்றார்.

இக்கூட்டத்தில் சிவதொண்டன் நிலைய நிர்வாகி திரு. ஆ. செல்லத்துரை, தத்துவசிரான்மணி க. கணபதிப்பிள்ளை, கொழும்பு சாரதா சமித்திச் செயலாளர் செல்வி. வ. கணபதிப்பிள்ளை ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் குருகுலப் பழைய மாணவர் மன்ற உப தலைவர் திரு. சீ. விநாயகமூர்த்தி நன்றி கூறினார். (05)

## ஆஞ்சநேயர் பேச்சு

# தமிழீழ இலட்சியத்தை தகர்ப்பது அசாத்தியம்

(கோண்டாவில்)

''தமிழீழமே எமது இறுதி இலட்சியம். இதனை எந்த சக்தியாலும் அழிக்கவோ, தடுத்து நிறுத்தவோ முடியாது. அதனை விரைவுபடுத்துவதற்காக எமது பலத்தை நாம் கட்டி எழுப்ப வேண்டியது இன்றைய எமது வரலாற்றுக் கடமையாக உள்ளது'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

கோண்டாவில் பகுதி பொறுப்பாளராக இருந்து வீரமரணம் அடைந்த போராளி ஜெயகரனின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் கோண்டாவில் விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

திரு. து. சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் உரையாற்றும் போதே திரு. ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு கூறினார்.

நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டிருந்த இக்கூட்டத்தின் ஆரம்ப நிகழ்ச்சியாக மறைந்த போராளியின் உருவப்படத்திற்கு அவரின் பெற்றோர்களான திரு. நடராஜா தம்பதிகள் மலர்மாலை அணிவித்தனர்

மேற்படி கூட்டத்தில் தொடர்ந்து அஞ்சலி உரை நிகழ்த்திய திரு. ஆஞ்சநேயர் ''இன்று நாம் சுதந்திரமாக மூச்சு விடுகின்றோம் என்றால் சுதந்திரமாக எம் மண்ணில் உலாவுகின்றோம் என்றால் இந்திய அரசுக்கு நாம் மகஜர்கள் எழுதியோ, அதனால் ஏற்பட்ட பலனோ அல்ல, மாறாக இது நாள்வரை வீரமரணம் அடைந்துள்ள ஆயிரத்திமுந்நூற்றிஐம்பத்தைந்துக்கும் மேற்பட்ட போராளிகளின் இரத்தத்தினாலும், தியாகத்தினாலுமே என்பதை நாம் உணர வேண்டும்.

ஆறாவது திருத்தச் சட்டத்தை மாற்றுவதாகக் கூறிய ஸ்ரீலங்கா அரசு இன்று அதில் காலதாமதத்தை ஏற்படுத்தி வருவதுடன் சமுகத்துரோகிகளுடன் பேச்சு வார்த்தைகளையும் நடத்தி வருகின்றது. எது நடந்த போதும் எந்த சக்தியுடனும் போராடி அதனை நிர்மூலமாக்கும் வல்லமை எமக்கு உண்டு என்பதை அவர்கள் உணர வேண்டும்'' என்றார்.

கோண்டாவில் கிழக்கு கிராமசேவகர் திரு. சந்திரசேகரம் தனது உரையின் போது ''கோண்டாவில் வடக்கு கிராமம் வீரம் செறிந்தது. பல போராளிகளுக்கு பாதுகாப்புத் தந்த பூமி. பல போராளிகளை உருவாக்கிய பூமி. பல வீரம் செறிந்த அன்னையர் வாழும் பூமி அந்த வீரம் செறிந்த அன்னையர்களில் ஒருவர் தான் மறைந்த போராளி ஜெயகரனின் தாயான திருமதி நடராஜா ஆவார்'' என்றார். (41)

---

### பாம்பு கடித்து மடிந்தவரருகே

## உயிர்துறந்த பாம்பு கிழக்கில் சம்பவம்

பாம்பு தீண்டி இறந்தவர் அருகே உயிர் விட்டது பாம்பு. ஆச்சரியம் ஆனால் உண்மை. இச் சம்பவம் மட்டக்களப்பு சந்திவெளி திகிலி வட்டையில் நிகழ்ந்துள்ளது. இங்கு வயல் வெளியில் ஒரு பெண் அண்மையில் பாம்பு தீண்டி இறந்து விட்டார். இவரது சடலத்தைச் சந்தி வெளிக்குக் கொண்டுவந்து அடக்கம் செய்ய முற்பட்டபோது மறுநாள் திடீரென அங்கு ஒரு பாம்பு தோன்றியது. பாம்பைக் கண்டவர்கள் திமிலோகப்பட்டு சடலத்தை விட்டோடி ஒதுங்கிய போது பாம்பு இறந்தவர் அருகே வந்து படுத்துக் கொண்டது. பின்பு தடிகொண்டு தட்டிப் பார்த்த போது பாம்பு இறந்து காணப்பட்டது. அப் பாம்பு வெள்ளை நிறமான நல்ல பாம்பு என்பது குறிப்பிடத்தக்கது.

---

## யதார்த்த பூர்வ சிந்தனையின் களம் பல்கலைக்கழகம்

(மானிப்பாய்)

கல்வித்துறையின் ஏனைய நிறுவனங்களுக்கு வழி காட்டியாக யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம் விளங்குகின்றது. வெறுமனே பட்டப் படிப்புப் பட்டங்களை மட்டும் வழங்காது, யதார்த்த பூர்வமாகச் சிந்தித்து சமுகத்தின் பல்வேறு கோணங்களிலும் தனது முத்திரையை பதிந்து கொண்டிருப்பது இப்பல்கலைக்கழகம். இதன் முகாமைத்துறையினர் வெளியீடு செய்யும்'' வர்த்தக உலகம்'' சஞ்சிகையும் மாணவர் உலகை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் மிகவும் குன்றி வருகின்றது. புத்தகங்களை படிக்க முடியாதவர்களின் அறிவுத் தாகத்தை சஞ்சிகைகள் ஓரளவு தீர்க்கின்றன.

இவ்வாறு முகாமை - கணக்கியல் கற்கை நிறுவன வெளியீடான ''வர்த்தக உலகம்'' காலாண்டு சஞ்சிகை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பிரதானமண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்ட விழாவுக்கு தலைமை தாங்கிய யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். தியாகராஜா கூறினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. கஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். முதற்பிரதியினை பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. என். பேரின்பநாதன் பெற்றுக் கொண்டார்,

பேராசிரியர் ரொனி எஸ். ராஜரத்தினம், வர்த்தக கல்வி அதிகாரி எஸ். சிவராஜா, பட்டயக் கணக்காளர் செல்வி ஜெ. முருகேசு, விரிவுரையாளர்கள் திரு. பி. பாலச்சந்திரன், திரு. தே. ஜெயராமன், திரு. கே. அருள்வேல், செல்வி கி. வீரசிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (30)

---

## பூர்த்தி

வீரமரணம் அடைந்த போராளிகளின் நினைவாக பொற்பதி வீதியில் அமைக்கப்பட்டு வந்த நினைவுத் தூபியின் வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளதுடன், இதன் திறப்பு விழா வெகு விரைவில் நடைபெற உள்ளது.

இந்த திறப்பு விழாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வர். (41)

---

### முதலாம் தர அதிபர் பதவியுயர்வு

# தமக்கு அநீதி இழைப்பு என்று மூன்றாம் தர அதிபர் முறையீடு

முதலாம் தர அதிபர் பதவி உயர்வு சம்பந்தமாகப் பரீட்சை மூலம். தெரிவு செய்யப்பட்டுச் சேவையாற்றும் மூன்றாம் தர அதிபர்கள் கவலையும், ஆட்சேபமும் தெரிவித்துள்ளனர்.

பதில் அதிபர்களாக மூன்று வருடங்கள் கடமையாற்றியவர்களும், பாடசாலையின் தரத்தால் அதிபர் தரம் ஒன்றைப் பெற உள்ளதும், அதிபர் தரம் இரண்டில் இருப்பவர்களுக்கும் முதலாம் தர அதிபராகப் பதவி உயர்த்தப்பட இருப்பதுமே மூன்றாம் தர அதிபர்களின் விசனத்திற்குக் காரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டுள்ள மூன்றாம் தர அதிபர்கள் தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி பற்றிக் கல்வி அமைச்சுக்கு முறையிட்டுள்ளனர்.

மூன்றாம் தர அதிபர்களின் உதவி ஆசிரியர்களாக இருந்தவர்கள் எப்படியோ பதில் அதிபர்களாகி அதன் மூலம் இன்று முதலாம் தர அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்று முன்னர் தமக்கு அதிபராக இருந்த மூன்றாம் தர அதிபரையே தமக்குக் கீழ் வைத்திருக்கும் 'அதிசயம்' பற்றியும் மனக் குமுறலுடன் சுட்டிக் காட்டியுள்ளனர்.(36)

---

## விளையாட்டுச் செய்திகள்

## 40 வது ஆண்டு நிறைவு

(விளையாட்டுத்துறை நிருபர்)

கட்டைப்பிராய் கலைமணி சனசமூக நிலையம், அதன் 40 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக 'ஓவர் கேம்' கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

யாழ். மாவட்ட.த்திற்குள் உள்ள கழகங்கள் மாத்திரமே இப்போட்டியில் பங்கு பற்றலாம். நொக் அவுட் முறையில் நடைபெற உள்ள இப்போட்டியில் ஒரு கழகத்தில் இருந்து எத்தனை அணிகளும் பங்குபற்றலாம்.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பதாக நிலைய செயலாளர் ஸ்ரீசண்முகநாதனுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (16)

## மாவட்ட விளையாட்டு போட்டி தெல்லிப்பழையில் நடைபெறும்

(முள்ளியான்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து வெற்றியீட்டியவர்களுக்கான மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் தெல்லிப்பழையில் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்தும் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகள் மாவட்ட விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

உதவி அரச அதிபர் பிரிவில் முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்ற வீர, வீராங்கனைகளே மாவட்டப்போட்டியில் பங்கு பற்ற முடியும். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவில் இருந்தும் இருபோட்டியாளர்கள் கலந்து கொள்ளமுடியும்.

மாவட்டப் போட்டியில் வெற்றியீட்டுபவர்கள் அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

மாவட்டப் போட்டிகளை சிறப்பாக நடாத்துவதற்கு விளையாட்டு உத்தியோகத்தர்கள் பாடுபட்டு வருகின்றனர். (43)

## நியூசிலாந்து எதிர் ஸ்ரீலங்கா

(விளையாட்டுத்துறை நிருபர்)

நியூசிலாந்தில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி நடுப்பகுதியில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணிக்கும் நியூசிலாந்து கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெறவுள்ள கிரிக்கெட் பந்தயங்களுக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்க கிரிக்கெட் போட்டியின் செயலாளர் திரு. எஸ். ஸகன்டர்க உமார் தெரிவித்துள்ளார்.

இப்போட்டித் தொடரில் 3 ரெஸ்ற் போட்டிகளும், 3 ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேசப் போட்டிகளும் நடைபெற உள்ளன. போட்டிகளின் அட்டவணை ஜனவரி, 26 ஆம் திகதி முதலாவது ஒருநாள் போட்டி 28 ஆம் திகதி இரண்டாவது ஒருநாள் போட்டியும் பெப்ரவரி 6 ஆம் திகதி மூன்றாவது ஒருநாள் போட்டியும் நடைபெறும்.

பெப் 31 இல் இருந்து 4 ஆம் திகதிவரை முதலாவது ரெஸ்ற் போட்டியும், பெப் 22 இல் இருந்து 24 ஆம் திகதி வரை 2 வது ரெஸ்ற் போட்டியும் மார்ச் 1 ஆம் திகதியில் இருந்து 5 ஆம் திகதிவரை மூன்றாவது ரெஸ்ட் போட்டியும் நடைபெறும். (16)

## சென் அன்தனிஸ் சாம்பியன் யோசப்பின் அபார ஆட்டம்

(விளையாட்டுத்துறை நிருபர்)

யாழ் வை. எம். சி. ஏ. அதன் நூறாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக நடத்திவரும் பல்வேறு கலை கலாசார நிகழ்ச்சிகள் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக கடந்த 24 ஆம் திகதி கிழக்கு அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய மைதானத்தில் சர்வதேச விதிகட்கு அமைய 'செற்அப்' முறையிலான கரப்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் நடைபெற்றது.

இப்போட்டியில் பாஷையூர் சென் அந்தனிஸ விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து மோதிய சாவகச்சேரி மோகனதாஸ் விளையாட்டு அணியை மூன்று நேர் செற்றுகளால் தோற்கடித்து சாம்பியன் ஆனது.

சென் அந்தனிஸ் அணி வீரன் ஆர். யோசப் மின்னல் வேகத்தில் பந்துகளை அடித்து எதிர் அணியினரை கதிகலங்கவைத்தார். அதே அணியைச் சேர்ந்த வீரன் ஏ. செபஸ்றியாம்பிள்ளை அடிக்கவேண்டிய பந்துகளை அடித்தும் 'பிளேஸ்' செய்தும் புத்திசாதுரியமாக ஆடி தமது அணியை வெற்றிப்பாதையில் இட்டுச்சென்றார். மோகனதாஸ் அணியினரின் ஆட்டம் அவ்வளவாக சோபிக்கவில்லை.

அவர்களால் முதலாவது, மூன்றாவது செற்றுகளில் முறையே 5, 2 புள்ளிகளையே பெறமுடிந்தது. இரண்டாவது செற்றில் மாத்திரம் 13 புள்ளிகளைப் பெற்றார்கள்.

பெரும் திரளானமக்கள் கண்டுகளித்த இப்போட்டிக்கு திரு. குணரெட்டினம் நடுவராகவும் திரு. எஸ். கே. இராசரெட்டினம் உதவி நடுவராகவும் கடமையாற்றினார்கள்,

ஆட்டம் ஆரம்பம் ஆவதற்கு முன்பதாக வை, எம், சி, ஏ, தலைவர் சாம் எஸ், சதாசிவனுக்கு இரு அணி வீரர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்,

பொலிஸ் சேவையில் தமிழர் பின்இடம்

# சிங்களவர் 21,435 முஸ்லிம் 596. தமிழர் தொகை 530 மட்டுமே

பொலிஸ்சேவையில் 21,435 சிங்களவர் 596 முஸ்லிம்கள் 530 தமிழர்கள் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி திரு. மாவை சேனாதிராஜா எழுப்பிய வாய்மூலக் கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், பெருந் தோட்டத் தொழில் துறை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன இத்தகவலை வெளியிட்டார்.

பொலிஸ் உப.சேவையில் 1989.11.30 வரை 15,736 சிங்களவர்களும், 682 தமிழர்களும் 845 முஸ்லிம்களும் பணியாற்றுகின்றார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## தொழில் பயிலுநர் திட்டமும் 'அருவி' நூல் வெளியீடும்

வேலணை துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களுக்கான தொழில் பயிலுநர் ஆக்கல் திட்டம் எதிர்வரும் 28-ம் திகதி காலை 9 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் முறைசாராக் கல்விப் பிரிவினரால் வெளிவிடப்படும் 'அருவி' என்னும் நூலும் வெளியிட்டு வைக்கப்படும்.

இந் நிகழ்ச்சியில் வேலணை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சீ. குலேந்திரன், கல்வி அதிகாரி தொழில் நுட்பம் திரு. த. சுப்பிரமணியம், கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (04)

## பன்றிக்கு வைத்த வெடி பாலகனைப் பலி கொண்டது

பன்றிக்கு வைக்கப்பட்ட கட்டுத்துவக்குடன் விளையாடிய சிறுவன் துப்பாக்கி வெடித்ததனால் ஸ்தலத்திலே மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் முருகண்டி இந்துபுரத்தில் இடம்பெற்றுள்ளது. கருப்பையா கணேசன் என்ற 12 வயதுச் சிறுவனே மேற்படி பலியாகியுள்ளார். கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு. நா. சத்தியசீலன் சடல பரிசோதனையை நடாத்தினார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. திருலோகமூர்த்தி விசாரணைகளை மேற்கொண்டார். (ப. 6)

## வர்த்தகக் கல்வி ஆசிரியர்களின் இரு நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் வர்த்தகக்கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராஜாவினால் வர்த்தக ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்டது.

முதல் நாள் கருத்தரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களான திரு. க.தேவராஜா, திரு. தே.ஜெயராமன் ஆகியோரும் இரண்டாம் நாள் கருத்தரங்கில் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.க.ஜெயராம்,பட்டயக் கணக்காளர் செல்வி ஜெ. முருகேசு ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பெருந் தொகையான ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.(30)

## மார்க்கம் கிடைக்குமா?

(வல்வெட்டித் துறை)

பருத்தித்துறை உதவி அரசாங்க பிரிவான வல்வெட்டித் துறை வடக்கிற்கும், ஆதி கோவிலடிப் பிரிவுக்கும் ஒரே கிராம சேவையாளர் மிகக்கஷ்டத்தின் மத்தியில் சேவையாற்றி வருகிறார்.

சில மாதமாக இந்த நிலை நீடிப்பதால் மக்கள் பல கஷ்டத்துக்குள் தள்ளப் படுகின்றனர்.

ஏன் இன்னும் இந்த நிலை? தனித் தனியாக கிராமசேவர்கள் நியமிக்கப் பட்டு, மக்கள் குறை நீங்க வழி இனியாவது பிறக்குமா என்று மக்கள் வினவுகின்றனர். (22)

## 'வந்து பாருங்கள்'

எழுத்தாளர் திரு, ம. ஜீவரட்ணத்தின் (ஜீவாண்ணன்) 'வந்து பாருங்கள்' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பி. பகல் 4 மணியளவில் தொடர்பகத்தில் நடைபெறும். (O. L. R ஆலயம் முன்பாக)

இவ்வெளியீட்டு விழாவில் அ. அமிர்தராஜ் (ஆசிரியர் சென். பற்றிக்ஸ்) வரவேற்புரையினையும் அருட்திரு. எஸ். ஜே. பிரான்சிஸ் (அ. ம. தி) பங்குத் தந்தை முகமாலை தலைமையுரையினையும்அருட் திரு. எஸ். எச். ஜெபநேசன் (பங்குத்தந்தை மரியன்னை பேராலயம்) ஆசியுரையினையும் நிகழ்த்துவார்கள்.

## வடிவேலு சுவாமி சிகிச்சைக்கு அனுமதி

(உருத்திரபுரம்)

ஜெயந்திநகர் மகாதேவஆச்சிரமத்தின் ஸ்தாபகரான வடிவேலு சுவாமி சிறுநீரக நோயினால் திருநெல்வேலி நேர்சிங் ஹோமில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இவர் சச்சிதானந்த சுவாமியின் சீடனும், கிளிநொச்சி குருகுலம் ஸ்தாபகரும் உருத்திரபுரம் காந்தி நிலையம் ஸ்தாபகரும் ஆவார். (ப.6)

## விபத்தில் மரணம்

மருதங்கேணி பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிற்றம்பலம் (66) என்பவர் மோட்டார்ச் சைக்கிள் விபத்தில் சிக்கி மரணமானார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் யாழ் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் நடந்ததைத் தொடர்ந்து இவரது சடலம் பொது மக்களால் எடுத்துச் செல்லப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. (4)

## அன்பளிப்பு

வேலணை அரசினர் கிராமிய ஆஸ்பத்திரிக்கு வேலணை கிழக்கைச் சேர்ந்த திரு. இராசையா சுவர்மணிக் கூடொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்த ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரி திரு. ஆ. திருநாவுக்கரசுவிடம் இதனை அவர் கையளித்தார் (24)

## சுவையான செய்திகள்

### திருட முனைகையில் சாவு

டோக்கியோவில் ஒரு பெண் காலையில் படுக்கையிலிருந்து எழுந்து கண் விழித்ததும் தனது படுக்கையறை ஜன்னலை ஒட்டி ஒரு மனிதன் செத்துக் கிடப்பதைப் பார்த்து அலறி விட்டாள். பொலிஸ் ஆராய்ந்ததில் ஜன்னலருகே வந்து திருட முயன்ற போது ஹார்ட் அட்டக்கில் இறந்து விட்டிருந்தது தெரிய வந்தது.

### பன்றியென்றாலும் அன்பே

குழந்தையைக் கொஞ்சும் போது நாம் கண்ணே மணியே கட்டிக் கரும்பே என்று கொஞ்சுகின்றோம். ஆனால் பிற நாட்டினரோ வெவ்வேறு விதமாக வர்ணித்து குழந்தையைக் கொஞ்சுகின்றனர். போலந்து நாட்டினர் 'பிஸ்கட்டே என்று கொஞ்சுகின்றனர். அரேபியர் வெள்ளரிப் பிஞ்சே ..... என்கின்றனர். பின்லாந்து நாட்டினர் இளந்தளிரே எனக் கொஞ்சுகின்றனர், திபேத்தில் சின்னஞ் சிறு பன்றியே என்று கொஞ்சுகின்றனராம்.

### கன்னியின் காதில் பூ எனின்...

தாஹிதியில் மூரியா இனத்துப் பெண்கள் நல்ல அழகிகள். நாட்டியத்தில் சிறந்தவர்களும் கூட. இந்த நாட்டியப் பெண்களில் கன்னி ஒருத்தி வலக் காதின் மேல் பூ வைத்திருந்தால் அவள் தனக்கு கணவனை தேடிக் கொண்டிருக்கிறாள் என்று அர்த்தமாம். இதை யாராவது காதில் பூ வைத்து இருப்பவளிடம் போய் சொல்லுங்கள் நம்புவார்கள் என்கிறீர்களா?

## முரசொலிக்கு வந்த கடிதம்

### கவனயீனத்துக்கு முடிவு வேண்டும்

ஆசிரியர்
முரசொலி

சில ஆண்டுகளாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான சீரான மருந்தின்மையும், கடமை புரியும் சில ஊழியரின் அசட்டையும் தொடர்ந்து நிலவி வருகின்றது.

ஊழியரின் அக்கறை இன்மைக்கும் எடுத்துக்காட்டாக, சில தினங்களுக்கு முன் இனந்தெரியாத ஒரு நபர் அங்குள்ள வாட்டுக்கு இரவு நேரத்தில் சென்றிருந்தபோது, கடமை நேரத்தில் இருந்த ஊழியர் அந்நேரத்தில் அங்கு இல்லாமையால் அந்நபர் அங்குள்ள லாம்பு ஒன்றைத் திருடிச் சென்றுள்ளார். இந்த நிலை தொடருமாயின் அங்குள்ள வேறு பொருட்களும் திருடப்படும் என்பதற்கு ஐயமில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் எடுப்பார்களா?

புதுவை — புதுவேந்தன்

### வட்டக்கச்சியின் இக்குறை நீங்குமா?

ஆசிரியர்
முரசொலி

விளையாட்டுக் கலையை வன்னிப் பிரதேசத்தில் வளம் படுத்த முனைபவர்கள் வட்டக்கச்சியில் ஒரு வளமான விளையாட்டு மைதானம் இல்லாத குறையை தீர்த்து வைக்க இதுவரையும் முன்வராதது மனவருத்தந் தரும் நிகழ்வாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் ஒன்றான வட்டக்கச்சியில் விளையாட்டுத் துறை மற்றும் சமூகத்துறை சார்ந்த பல நிறுவனங்களும் அமைப்புக்களும் இருந்தும் இதுவரையில் ஒரு பொது விளையாட்டு மைதானம் அமைக்க முயற்சிக்கவில்லை. இதுவரைகாலமும் தீர்க்கப்படாத இக் குறையை எதிர்காலத்திலாவது தீர்ப்பதற்கு உரியவர்கள் முயற்சிக்கவேண்டும்.

வட்டக்கச்சி — கி. உதயன்

இவர்களுக்காக

## காருண்ய அடிப்படையில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை

(மட்டக்களப்பு)

பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கும், றெயில்வே கடவை காவலாளிகளாக நியமிக்கப் பட்டுள்ளவர்களுக்கும் மட்டும் உணவு முத்திரைகளை ரத்துச் செய்யுமாறும், அவர்களின் குடும்ப ஏனைய அங்கத்தவர்களுக்கு உணவு முத்திரையை தொடர்ந்து வழங்குமாறும் சமூக சேவைகள் அமைச்சுக்கும், சமூக சேவைகள் திணைக்களத்திற்கும் மட்/ சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பயிலுநர் ஆசிரியர்களாகவும், றெயில்வே கடவை காவலாளிகளாகவும் நியமிக்கப் பட்டுள்ளவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் உணவு முத்திரையை ரத்துச் செய்வதால் அக்குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்படும் எனவும், ஆகவே மேற்படி நியமனம் கிடைத்தவர்களுக்கு மட்டும் உணவு முத்திரைகளை ரத்துச் செய்து குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கு காருண்ய அடிப்படையில் உணவு முத்திரைகளை வழங்கும்மாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க

## மூவகை பண்டிதர் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின


யாழ்ப்பாணம் ஆசிரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட தமிழ்ப்பண்டிதர், பால பண்டித, பிரவேச பண்டிதப் பரீட்சைகளின் பெறுபேறுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

பண்டித பரீட்சையில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. ந. கடம்பேசுவரன் சித்தியடைந்துள்ளார். பாலபண்டித பரீட்சையில் இரண்டாந் தரத்தில் திரு. க. சிவகரன் (இருபாலை). சொ. வாசுகி (நாயன்மார்கட்டு), இ. உமாராணி (யாழ். நாச்சிமார் கோவிலடி) ஆகிய மூவரும் சித்தியடைந்துள்ளனர்.

திரு. க. வைரமுத்து (மட்டுவில்) என்பவர் நூனசித்தி பெற்றுள்ளார். பிரவேசப் பரீட்சையில் வடமாநிலத்தில் உள்ள பதினைந்து கல்லூரிகளில் இருந்து 151 உயர்வகுப்பு மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில் ஆறுபேர் முதலாம் தரத்திலும், பதினைந்து பேர் இரண்டாம் தரத்திலும், நாற்பது பேர் மூன்றாம் தரத்திலும் சித்தி அடைந்துள்ளனர். (36)

## சிறுவன் காயம்

துணுக்காய் கொக்காவில் வீதியைச் சேர்ந்த புஸ்பநாதன் செந்தில்ராஜ் (12) என்ற சிறுவனைகுரங்கு துரத்தித் துரத்திக் கடித்துள்ளது.



மலையகத் தமிழர் மீதான அடக்குமுறைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் கோரப்பட்டு இடம்பெற்ற பூரண ஹர்த்தாலின்போது யாழ், ஸ்ரான்லிவீதி இப்படி வெறிச்சோடிக் காணப்படுகின்றது. வழமையான நாட்களில் இவ் வீதி வாகன, சன நெரிசலால் படும்பாட்டை இரண்டாவது படம் காட்டுகின்றது.


## சிறு விளம்பரம்

### தேவை

மிக விரைவாக வளர்ந்து வரும் ஸ்தாபனத்திற்கு வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள்தேவை நல்ல சம்பளம் வழங்கப்படும், 27, 05, 90 காலை நேரில் விண்ணப்பிக்கவும் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ், 19/3 கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளி (மகளிர் கல்லூரி எதிர் வீதி) சுண்டுக்குளி 05171


## மயிலணியில்

மயிலணி சைவ மாக வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். மருதனாமடம் கோட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.இ. ச. குலசேகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினார்களாக உடற் கல்வி கல்வியதிகாரி திரு.கே நாகமணி சுன்னாகம் கொத்தணி அதிபர் திரு.எஸ் இராஜாவல்லவன் ஆகியோர் கலந்து கொள்வார்.


## கனடாவிற்கான
### உடனடிப் பிரயாண ஒழுங்கு

கனடா செல்வதற்கு 35—45 வயது மதிக்கத்தக்க இரு பெண்களும் 18—25 வயது மதிக்கத்தக்க நான்கு பெண்களும் தேவை. செலவில் அரைப்பங்கை கனடாவில் செலுத்த முடியும். விபரங்களிற்கு 26-ம், 27-ம் திகதிகளில் மட்டும் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**MR. A. Joseph**
754, Hospital Road, Jaffna.
05170


## மெய்வல்லுநர் போட்டி

ஆனைக்கோட்டை, ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலைமைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் கொத்தணிஅதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு கிட்ணர் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

திருமதி யசோதரா தியாகராஜா பரிசில்களை வழங்குவார் இப் போட்டி நிகழ்ச்சிக்கு அதிபர் திரு.க.செல்வநாயகம் தலைமை வகிப்பார்.

## இன்று

வேலணை உதவி அரச அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியா சாலை மண்டபத்தில் திரு.இ. சற்குருநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (36)

## இன்று கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்து நடத்தும் 'சமுதாய அபிவிருத்தியில் பெண்களின் பங்கு' என்னும் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலையின் பிராந்திய அலுவலகர் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை வைபரீதியாக ஆரம்பித்து வைக்கும் இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி. அம்மன் கிளி முருகதாஸ் திரு. எம். ஸ்ரீபதி, திருமதி. சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்கள்.

இக் கருத்தரங்கின் போது அவ்வூர் கிராம மக்களது பிரச்சனைகள், அபிவிருத்தித் தேவைகள் என்பன போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும். (36)

## வாட்டில........

(3பக்கத் தொடர்சி)

கொண்டுவர வேண்டும். ஆனால் ஆள்மாறி சாதாரண நோயாளர் ஒருவரை பலவந்தமாக அன்புலன்ஸ் வண்டியில் ஏற்றி யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து விட்டனர்.

இந்த நோயாளரை அன்புலன்ஸ் வண்டியில் ஏற்றிவர வேண்டிய அவசியமே இல்லை. இவர் ஒரு சாதாரண நோயாளர் என்று யாழ் போதனா வைத்தியசாலை டாக்டர்களால் கூறப்பட்டுள்ளது. மீண்டும் அந்த சாதாரண நோயாளர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அந்த சாதாரண நோயாளருக்கு அன்புலன்ஸ் வண்டியில் இலவசமாகப் பயணம் செய்யும் வாய்ப்பை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பெற்றுக் கொடுத்துள்ளது. இதற்காக அவர்களை பாராட்டாமல் இருக்க முடியுமா...?

கிளிநொச்சிவைத்தியசாலையில் ஆபத்தான நோயாளி அவதிப்படுவதைக் கண்டு அன்புலன்ஸ் சாதாரண நோயாளியை இறக்கி விட்டு ஆபத்தான நோயாளியை ஏற்றிக்கொண்டு யாழ் போதனா வைத்திய சாலையைச் சென்றடைந்தது,

இப்படியான மிகமிக வேதனையான சம்பவங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்தான்நடக்கின்றன. நோயாளர்களுக்கு உணவு சமைக்கப்படும் சமையல் அறைகளை நோட்டம் விடச் சென்றோம். அங்கே நாம் கண்டகாட்சி......!?

(திங்கள் தொடரும்)


# COMPUTER PROGRAMMING COURSES

| | Commencement | Days | Time |
|---|---|---|---|
| BASIC (Week-End Batch) | 26 — 05 — 90 | SAT.<br>SUN. | 8.30 — 10.30<br>1.30 — 3.30 |
| BASIC (Week-Day Batch) | 05 — 06 — 90 | TUE<br>THU. | 10.30 — 12 30<br>10.30 — 12.30 |
| LOTUS 1,2,3, | 28 — 05 — 90 | MON.<br>WED. | 10.30 — 12.30<br>10.30 — 12.30 |
| d BASE III + | 29 — 05 — 90 | TUE.<br>THU. | 10.30 — 12.30<br>10.30 — 12.30 |
| WORD·PROCESSING | 30 — 05 — 90 | WED.<br>FRI. | 8.30 — 10.30<br>8.30 — 10 30 |

✶ Lectures By Members of The Institute of Data Processing Management (London)
✶ More Hours of Practicals ✶ Attractive Fees ✶ Fees in Installments
✶ Explanations in Tamil ✶ Valuable Certificate

NOTE: Personal Classes for Professionals


C. I.M.A., I.D.P.M., A.A.T., Book-Keepers Classes are Commencing on 02 - 06 - 90

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street
JAFFNA

05167


## 6-வது ஆண்டு நினைவஞ்சலி



**கந்தசாமி இளங்கோ**

ஆண்டவன் படைப்பு 21-05-67 அகால மறைவு 26-05-84

நீ மறைந்து ஆறு ஆண்டுகள் ஆனாலும்
எங்கள் மனம் ஆறவில்லை.
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, மைத்துனர், மைத்துனிமார், உற்றார், உறவினர் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துன்னாலை தெற்கு
பொன்னந் தோட்டம்

குடும்பத்தினர்

05165

MHURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 26-05-1990 சனிக்கிழமை

# இந்திய ராணுவத்தால் யாழ். தேர்தல் கிளைக்கு 21 லட்சம் ரூபா நட்டம்

1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையினரால் சேதமாக்கப்பட்ட யாழ் தேர்தல் அலுவலகத்திற்கு 21 லட்ச ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நஷ்டத்தினை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவினரே மேற்படி தகவலை தெரிவித்துள்ளனர்.

இவ் விசாரணைக் குழுவில் உதவி தேர்தல் ஆணையாளர் எம். சி. அருந்தவச்செல்வம் உதவிஉணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு வீ. நடேச பிள்ளை, உதவி சமூகசேவைப் பணிப்பாளர் திருமதி கே. சிவசிதம்பரம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

மேற்படி 21 லட்ச ரூபா நஷ்டத்தில் காரியாலய உபகரணங்கள், கட்டடங்கள், தஸ்தாவேசீக்கள் களஞ்சிய உபகரணங்கள் என்பனவற்றின் அழிவே அடங்குகின்றது மேற்படி விசாரணைக் குழுவினால் தயாரிக்கப்பட்ட இவ்வறிக்கை கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளது (03)

## உத்தரவு பெற்ற தனியார் வர்த்தகர்கள் உணவு முத்திரைப்பொருட்களில் மோசடி

யாழ் ப. நோ. கூ. சங்கத்தில் சுமார் 45 உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் யாழ் ப.நோ.கூ சங்கத்தில் கூடுதலாக கோதுமை மா, சீனி, வெ.ப. அரிசி, பால் மா போன்ற வகைகளையும் நாட்டில் தட்டுப்பாடு நிலவும் பொருட்களையும் தமது உணவு முத்திரைகளுக்குப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆனால் யாழ். ப, நோ. கூ. சங்கத்தில் தாம் பெற்றுக் கொள்ளும் விகிதாசார அடிப்படையில் உணவு முத்திரை பாவனையாளர்களுக்கு பொருட்கள்வழங்குவதில்லை. ஆனால், உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் தாம் ப.நோ.கூ சங்கத்தில் கொள்வனவு செய்த பொருட்களை பேக்கரிகளுக்கும், பட்டனத்தில் உள்ள தனியார் கடைகளுக்கும் விற்பனை செய்து பணமாக்கிக் கொள்வதுடன் தமது பாவனையாளர்களுக்கு தரங் குறைவான பொருட்களையும் விலை அதிகரிப்பான பொருட்களையும் வழங்கி வருகின்றனர்.

இவர்களது இந்த செயலால் ப.நோ.கூ.சங்கததில் பேக்கரிகளுக்கான மாவு விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் யாழ் பட்டனக்கிளைச் செயலாளர் திரு. தவராசா திருகோணமலை கூட்டுறவு அமைச்சின் செயலாளருக்கு யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் இணைக்கப் பெற்றுள்ள உத்தரவு பெற்ற வர்த்தகர்களின் விடயம் குறித்து அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ் மாவட்டத்திற்கான 500 நேரடித் தொலைபேசி உபகரணங்கள் கொழும்பு வந்து சேர்ந்தன

யாழ் மாவட்டத்திற்கு வழங்கப்படவுள்ள 500 தொலைபேசி இணைப்புகளுக்கான பாரியஉபகரணங்கள் கொழும்பை வந்தடைந்துள்ளன.

இவற்றை வடபகுதிக்கு கொண்டு வருவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன். இது தொடர்பான ஆலோசனைகள் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டன.

இந்த உபகரணங்கள் இங்கு வந்து சேர்ந்ததும் உடன் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இந்த தொலைபேசி அமைப்பு வேலைகள் நிறை வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (03)

### இனிமேல்...

மாகாணசபை அக்கீகாரத்துடன் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

### திருமலை...

இப்பகுதியில் அடுத்தடுத்து அமைந்துள்ள பொலிஸ் மற்றும் இராணுவ முகாம்கள் இக்குடியேற்ற வாசிகளுக்கு பாதுகாப்பை வழங்கிவருகின்றன.

அத்துடன் இக்குடியேற்ற வாசிகளுக்கு இராணுவத்தினால் துப்பாக்கிகள் பாதுகாப்புக்கென தினமும் மாலையில் வழங்கப்பட்டு காலையில் மீளப் பெறப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜே. வி. பியினருக்கு பயந்தே துப்பாக்கிகளை காலையில் மீளப் பெறப்படுகின்றது.

ஆண்டாங் குளத்திற்கும் — ஹபரணைக்குமிடைப்பட்ட 35 மைல் தூரத்தில் சராசரி மைலுக்கு ஒன்று என்ற ரீதியில் படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன மங்கிபிரிச் 4ம் கட்டை, 13ம் கட்டைப் பகுதியில் பெரியமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கந்தளாய் அல்லை வீதியில் கரும்புச் செய்கைக்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளில் சிங்களகுடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அங்குள்ள மகாவலி அபிவிருத்தித்திட்ட பண்ணையிலும் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### அன்பளிப்பான...

வீட்டுத் தேவைக்காக உபயோகிப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணையில் நடைபெற்ற தீவுப்பகுதி அபிவிருத்தி மகாநாட்டிலேயே நெடுந்தீவைச் சேர்ந்த அதிகாரி யொருவர் இவ்விதம் குற்றம் சாட்டினார்.

இம்மினி பவுசரில் நீர்வழங்கும் திட்டத்தை நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்று நடாத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (24)

### மாகாண அரசு—

மாகாண அரசாங்கம் மேற்கொண்டதாலேயே ஏற்பட்டது என தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி அமைச்சு வர்த்தமானி அறிவித்தலின் மூலமே வடமராட்சி கிழக்கு பிரதேசசபை தனியாக இயங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

பிரதேச சபைத்தேர்தல்கள் விரைவில் நடக்க இருப்பதால் இக்குறுகிய கால எல்லைக்குள் வடமராட்சி கிழக்கிற்கு தனியான பிரதேசசபை அமைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (43)

### வெளிநாட்டில் —

டும் எனவும் குறிப்பிட்டார்

இக் கூட்டத்தில் விடுதலை புலிகளின் மக்கள் முன்னணியின் அமைப்பாளர் ராஜன் அருண் மாஸ்ரர் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர். திரு. கே. சண்முகதாசும் கலந்து கொண்டார்கள். (04)

### மலையக...

உயிர் கொடுக்க வேண்டிய தேவையில்லை இன்று நாம் கேட்பதெல்லாம் இம் மக்களை நாடு கடத்தக் கூடாது என்பதுதான். எம்மைப் பொறுத்தவரை தமிழ் நாடும் தமிழக முதல்வரும் இவர்களுக்கு சிறிலங்கா அரசு குடியுரிமை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ள வேண்டும். இவர்களை நாடு கடத்தும் முயற்சிக்கு ஆதரவு தரவும் கூடாது. சிங்கள இனப் படுகொலையை எதிர்த்தது தமிழகம் எப்போதும் எமக்கு ஆதரவு தந்து வந்தது. அதே போல மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்கு முறைகள் கொலைகள். நாடு கடத்தல் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்திற்கு தமிழக முதல்வரும் தமிழக மக்களும் முழுமையான ஆதரவைத் தரவேண்டும் என்று அதில் கேட்கப்பட்டுள்ளது.

## தடுத்து வைக்கப்பட்டோர் இன்றுகாலை விடுதலை

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்ட கைது செய்யப்பட்ட 110 பேர் இன்று காலை பதினொரு மணியலவில் விடுதலை செய்யப் பளவுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் முன்றலில் விடுவிக்கப்படுவார்கள் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பாண், மா விலை உயர்வு

மாவினது விலை திங்கள் முதல் அதிகரிக்கப் பட்டுள்ளதாக உணவுஆணையாளர் அறிவித்துள்ளார் ஒருகிலோமாவினது சில்லறை விலை 14ரூபா 25 சதம் உணவுக் களஞ்சிய விலை 13ரூபா 25 சதம் மொத்த விற்பனை விலை 13 ரூபா 80சதம்.

ஒரு இறாத்தல் பாணின் விலை 5ரூபா 30சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலையேற்றம் திங்கள் முதல் நடைமுறைக்கு வருவதால் வியாபாரிகள் மாவைப் பதுக்க வேண்டாமெனக் கேட்கப்பட்டுள்ள.ார்கள் (03)

## இதுவரை நிவாரணம் பெறாதோரின் இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபா நிவாரணம் விரைவில் கிடைக்கும்

இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபாவிற்கு பெயர்ப்பட்டியல் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டும் இதுவரை நிவாரணம் பெறாதோர் பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி கேட்கப்பட்டுள்டார்கள்,

இவர்களுக்குரிய நிவாரணப் பணம் பெறும் திகதி விரைவில் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுமெனவும் வீணாக அலைய வேண்டாமெனவும் செயலக அதிகாரிகள் கேட்டுள்ளனர். (03)

## 6-வது திருத்தச்சட்டம் குறித்து அரசு எதிர்க்கட்சிகள் பேச்சு

ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக அரசு ஏனைய சில எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடாத்தி வருவதாகத் தெரியவருகிறது.

ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு அரசிற்கு பாராளுமன்றத்தில் போதியளவு பெரும்பான்மை இல்லாமையினால் எதிர்க் கட்சிகளின் வாக்குக்களைபெற்றே இத்திருத்தச்சட்டத்தை நீக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ் மீன்பிடி அபிவிருத்திக்கு மக்கள் வங்கி கடன் திட்டம்

யாழ் குடா நாட்டின் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக மக்கள் வங்கி பாரிய கடன் திட்டமொன்று ஆரம்பிக்கவுள்ளது இத்திட்டம் விரைவில் நடைமுகைறகு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது,

இத்திட்டத்தின் கீழ் பாரிய மீன்பிடி இயந்திரங்கள், றோலர்கள் போன்றவற்றை கடற்தொழில் செய்வோர் பெற முடியும் இதன் மூலம் யாழ் குடா நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதியை நிரப்பும் மீன்பிடியை அபிவிருத்தி செய்யமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது, (03

## சட்டவிரோத மின்பாவனை ரான்ஸ்போமர் வெடித்தது

கோண்டாவில் பகுதியிலுள்ள குமரக்கோட்டம் என்னுமிடத்தில் சட்டவிரோத மின்பாவனை காரணமாக மின்னழுத்தம் அதிகமாகி ''ரான்ஸ்போமர்'' ஒன்று நேற்று வெடித்துள்ளது

இதனால் அதனை அண்டியுள்ள வீடுகளில் பெறுமதி வாய்ந்த மின்சார உபகரணங்கள் திருத்த முடியாதவாறு பழுதடைந்துவிட்டன

## முரசொலிக்கு வந்த தந்தி

நேற்று மாலை முரசொலிக்கு இளவாலை பொருளாதார வளர்ச்சிச் சங்க செயலாளரினால் தந்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அத்தந்தியில் கடந்த வார காலமாக கிளறப்பட்டுள்ள சேந்தாங்குளம் பெரியவிளான் தார் வீதியை உடன் செப்பனிடுமாறு உரியவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இவ் வீதிக்கு டஸ்ரோ, கிறசரோ, போட வேண்டாம் என விண்ணப்பிக்கிறோம், எனக் குறிப்பிடப்பட்டிருந்தது

### எனக்கும் ..

இது இவ்வாறு இருக்க நாளை திட்கட்கிழமை யாழ்ப்பாணம் வரும் நீதியமைச்சரும், வடகிழக்கு சமாதானக் குழுத்தலைவருமான ஜனாப் ஹமீத் ஆறாவது திருத்தத்தை நீக்குவது தொடர்பாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் அரசின் நிலைப்பாடுகள் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தெளிவு படுத்துவதில் கவனம் செலுத்துவார் என்றும் நேற்றிரவு கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## சொற்பொழிவு

நற்சமூக நடுநிலையச் சொற்பொழிவுத் தொடரில் 'படைப்பின் சீரிய நிலையும் சூழல் மாசடைதலும்' என்ற தலைப்பிலான சொற்பொழிவு இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் 115,4ம்—குறுக்குத் தெருவில் உள்ள நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சி.யோ. இம்மானுவல் தலைமை வகிப்பார். கலாநிதி தர்மன் மார்க் சவிரிமுத்து கலாநிதி ஐ.ஹென்றி விக்டர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட், சிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ஆம் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 26.05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது